பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்

வெளியூர்: தை 27 (10—2—68) சனி [இதழ்: 198

மலர்: 15] சென்னை: தை 26 (9—2—68) வெள்ளி

உழைப்புக்கு மதிப்பு கொடுக்கும் நிலை வரவேண்டும்

'மாடுகளோடு பிணைந்த தொழில் இயந்திரத்தோடு இணைப்போம்'—உணவுப் பெருக்கத்துக்கு அண்ணா அரிய ஆய்வுரை

சென்னை, பிப். 9—

"இன்றையத்தினம் பலர், தங்களை, 'விவசாயிகள்' என்று சொல்லிக்கொள்கிறார்கள்; அதிலும் குறிப்பாக, அரசு நடத்துகின்ற மாநாடுகளில், எல்லோரும் விவசாயிகளாகி விடுகிறார்கள்; ஆனால் உண்மையான விவசாயி, 'விவசாயி என்று கூறிக்கொண்டால் மதிப்புக் கிடைக்குமா' என்று வாடிக்கொண்டிருக்கிறான்!

"நாம், உழைப்புக்கு மதிப்புத் தரவேண்டும்; உலகத்தில் மற்ற நாடுகளில், உழைப்பவர்களுக்கு மதிப்புக் கிடைக்கிறது; ஆனால் இந்த நாட்டில், உழைப்பவனுக்கு மதிப்புக் கிடைப்பதில்லை; அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் மற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை!

"இந்த நிலை மாற வேண்டும்; ஏனெனில், ஒரு நாட்டின் உழைப்பின் பலனைக் கொண்டுதான் அந்த நாடு மற்ற நாடுகளால் மதிக்கப்படுமேதவிர, வெறும் அரசியல் வாதியாலோ, அமைச்சர்கள் எண்ணிக்கையாலோ அல்ல!

"ஆகவே, உழைப்பவனுக்கு மதிப்புத் தரும் நாள் வரவேண்டும்; பொங்கல் திருநாள், உழைப்புக்கு மதிப்புத் தருகின்ற நாளாக மாற வேண்டும்!"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், பெரம்பூர் ஜெயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சார்பில் நடைபெறற பொங்கல் விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினார்கள்.

ஐ.சி.எப். விளையாட்டு மைதானத்தில் திரு. ஆர். இராசகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. டி. செல்லையா, குன்றக்குடி அடிகளார், எஸ். எஸ். இரசேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இயந்திரத்தோடு இணைந்து செல்ல முயலவேண்டும்

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நம் நாட்டில் மாடுகளைப் பராமரிக்கும் செலவையும், அவற்றினுடைய உணவையும், அவற்றின் மூலம் கிடைக்கும் பலனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பெரும் நஷ்டம்தான் ஏற்படுகிறது. ஆகவே, மாடுகளுள்ள இடங்களில் பட்டுள்ள நம் முடைய உழவுத் தொழில் இயந்திரங்களோடு இணைக்கப்படும் காலத்தை நோக்கி நம் முன்னேறவேண்டும்.

உலகில் பல நாடுகள், இயந்திரத் துணையும் உழவுத் தொழிலை நடத்துகின்றன; ஆகவே நம் நாடும் இயந்திரங்களின்மூலம் உழவுத் தொழில் நடத்த வேண்டும்.

அமெரிக்காவில் உள்ளது போன்று பிரும்மாண்டமான டிராக்டரை நாம் நம்மிடையே இருக்கவேண்டியதில்லை; ஒவ்வொரு உழவனும் தானே இயக்கும் விசைக் கலப்பையைக் கொண்டு விவசாயம் செய்யும் நிலை வரவேண்டும்.

படித்த இளைஞர்கள் மாடு கட்டி உழுவதற்குத்தான் கூசப்படுகிறார்கள்; விசைக் கலப்பையைக் கொடுத்தால் அவர்களும் விவசாயத்தில் ஈடுபடுவார்கள்.

விசைக் கலப்பையைக் கொண்டு படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால், விவசாயி என்று தம்மோடு பெருமிதத்துடன் சொல்லிக்கொள்ள முடியும்!

மன ஒற்றுமையால்தான் ஒருமைப்பாடு ஏற்படும்

இறுதிப் பேட்டிகளில் ஒன்றே ஒன்றை இணைத்தும்பொழுது கொக்கி மாட்டி இணைப்பார்கள்; வளவுக் கொக்கி சரியாக இல்லை என்றால் சம்மட்டி கொண்டு அடித்துப் படாத பாடுபடுவார்கள்!

ஆனால், இந்திய ஒருமைப்பாடு இப்படிப்பட்ட கொக்கி இணைப்பாக இல்லாமல், 'வாக்குவம்' இணைப்பாக இருக்கவேண்டும்! அந்தக் கொக்கியை எடுத்துவிட்டு, மன ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்! மன ஒற்றுமையின் மூலம்தான் ஒருமைப்பாடு ஏற்படும்."

திரு. குன்றக்குடி அடிகளார் பேசுகையில், 'ஒருமைப்பாட்டில் அக்கறை காட்டும் இந்திய அரசாங்கம், 'திருக்குறளைத் தேசிய நூலாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றார்.

கோட்டைக்குள் நுழைய அனுமதி சீட்டு

பிப். 21-ம் நாள் முதல் செயல்படுத்தப்படலாம்

சென்னை, பிப். 8—

சென்னைக் கோட்டைக்குள் இருக்கும் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் நுழைவதற்கு அனுமதிச் சீட்டு வழங்கும் முறை, இதற்கான 21-ம் நாள் முதல் செயல்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தலைமைச் செயலகத்தில் பணி மாற்றமும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு அவரவர் புகைப் படத்துடன் கூடிய அடையாள சீட்டுகள் வழங்கப் பட்டு வருகின்றன.

தலைமைச் செயலகத்துக்கு வரும் பொதுமக்கள் வரவேற்பு அலுவலர்களுக்கு உரிய தகவல்களைக் கூற வரவேற்பு அலுவலகமும் ஏற்படுத்தப்படுகின்றன.

கருவூலம் காலி

பெல்லாரி நகராட்சியில், ரொக்க இருப்பு எதுவும் இல்லை!

இத்தகவல், நகராட்சியின் சிறப்புக் கூட்டம் நடந்தபோது தெரிவிக்கப்பட்டது.

நகராட்சிக்கு இம்மாதிரி நிலைமை ஏற்படுவது இதுவே முதல் தடவை என்றும் கூறப்படுகிறது.

நகராட்சி வருமானம் அதிகரித்த போதிலும், பொதுமக்களுக்கு வரிகள் எதுவும் செய்யாமல், உள்ளன.

பெல்லாரி, பிரிக்கப்படாத சென்ன மாநிலத்துடன் இருந்த போது, மாதிரி நகராட்சியாக விளங்கும் புகழைப் பெற்றிருந்தது; அபோதுகூட, நகராட்சி வருமானம் ஆண்டுக்கு ரூ. 8 இலட்சமே இருந்தது என்று பல உறுப்பினர்கள் கூறினர்.

இந்தி வெறியருக்குப் பாடம் புகட்டினர்

கூட்டத்திலிருந்து நிருபர்கள் வெளிநடப்பு

ராஞ்சி, பிப். 8—

அனைத்திந்திய இந்தி சாகித்திய சம்மேளனத் தலைவர் சேத் கோவிந்த தாஸ் பேசிய கூட்டமொன்றில், பல ஆங்கிலப் பத்திரிகைகள்—செய்தி நிருபர்கள் சார்ந்த நிருபர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

சில பத்திரிகைகளுக்கு எதிராக அவர் சில எதிர்ப்புக் கருத்துக் கூறினார்.

கீழ்க்கண்ட பத்திரிகைகளின் நிருபர்கள் வெளிநடப்புச் செய்தனர்:

1. ஸ்டேட்ஸ்மன்
2. இந்துஸ்தான் டைம்ஸ்
3. பேட்ரியட்
4. டைம்ஸ் ஆப் இந்தியா
5. இந்து
6. ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு
7. பிரபாத் கபர்
8. ஆர்யாவர்த்
9. ஜனசத்தா
10. நவபாரத் டைம்ஸ்
11. பிரதீப்
12. ஆஜ்
13. நவஜீவன்
14. ஹரிஜன்
15. ஹிந்துஸ்தான்
16. ஹிந்துஸ்தான் டைம்ஸ்

சேத் கோவிந்த தாஸ் ஒரு கூட்டத்தில் பேசுகையில், ஆங்கிலப் பத்திரிகைகளே, 'பொறுக்கிப் பத்திரிகைகள்' என்று கூறினாராம்!

'தமிழக மார்வாரிகட்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட்டுவிடவில்லை'

'இராஜஸ்தான் சட்டமன்றத்தில் கிளப்பிய புகாருக்கு ஆதாரமே இல்லை'

தமிழக மார்வாரிகள் சங்கத் தலைவர் மறுப்பும் விளக்கமும்

சென்னை, பிப். 8—

கடந்த டிசம்பர் திங்களில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி, தமிழ்நாட்டிலிருக்கும் மார்வாரிகளைப்பற்றி தங்கள் சொந்த மாநிலமான இராஜஸ்தானத்திற்கே திரும்பிவிட விரும்பியதாகக் கூறப்பட்டதைத் தமிழக இராஜஸ்தானியர் சங்கச் சார்பில் மறுக்கப்பட்டிருக்கிறது.

தமிழக இராஜஸ்தானியர் சங்கப் பொதுச்செயலாளரான திரு. ஹரிராலால் ஷியால் இக்கருத்தை மறுத்துரைக்கையில் குறிப்பதாவது:—

"இராஜஸ்தான் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த திருவாளர் சிங் ஷெகாவாட் என்பார், கூறிய புகார்கள் எவ்வித ஆதாரமும் இல்லை.

[இராஜஸ்தான் முதலமைச்சர் திரு. மோகன்லால் சுகாதியார், அந்த உறுப்பினர் கிளப்பிய புகாருக்குப் பதிலளிக்கும் வகையில் தமிழகத்தில் உள்ள இராஜஸ்தானியருக்குத் தக்க பாதுகாப்பு அளிக்குமாறு தமிழக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருப்பதாக அறிவித்தது கினைவுக்கூரலம்; அவர் எழுதிய கடிதம் பற்றிய முழு விவரம் தெரியாததால் அது பற்றித் தாம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை என்று திரு. ஷியால் கூறியிருக்கிறார்.]

திரு. ஷியால் மேலும் கூறியிருப்பதாவது:—

"எனக்குத் தெரிந்தவரையில் எந்த ஒரு இராஜஸ்தானியும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் விரும்பாத காரணத்தினால் தம் சொத்துக்களை விற்று விட்டோ, வியாபாரத்தை மூடி விட்டோ, சென்னையிலிருந்து வெளியேற முன்வந்ததாகத் தகவல் இல்லை. இங்கே அவர்கள் வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளைக் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அக்குழு, இந்தியத் தலைமையமைச்சரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

சென்னையில் உள்ள இராஜஸ்தானியர்களில் பெரும்பாலோர் கி மை ம இன்னநேரத்தை அறிந்துகொள்ளாமலே இருந்து வருகின்றனர். எங்களுக்கும் இந்திக்கும் எவ்விதத் தொடர்பு மில்லை; எங்கள் தாய்மொழி இராஜஸ்தானியே ஆகும். இராஜஸ்தானி மொழியையும் ஒரு முக்கிய மொழியாக இந்திய அரசு ஏற்றுக்கொள்ள நாங்கள் முயற்சி செய்துகொண்டுவருகிறோம்; திரு.கு. தி. மு.க. தலைவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்,

எங்கள் சங்கத்திற்குக் கிடைத்துள்ள புள்ளிவிவரப்படி, தமிழகத்தில் சுமார் ஒர் இலட்சம் இராஜஸ்தானியர் வாழ்கின்றனர்; சென்னை நகரில் மட்டும் 60,000-பேர் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோரின் குடும்பங்கள் நூறு ஆண்டுக்கு மேலாக இங்கேயே வாழ்ந்து வருபவையாகும்.

அவர்கள் பலஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் நிலையறிந்த வர்களாய் தமிழ் மக்களுடன் ஒன்றி வாழ்ந்துவருவதுடன், தமிழக முன்னேற்றத்திற்கும் தங்களாலான உதவிகளைச் செய்துவருகின்றனர். தங்கள் வியாபாரத்தோடுகூட, கல்வித் துறை வளர்ச்சிக்கும், சமுதாய நலவாழ்வுக்கும் உதவிகள் புரிந்துவருகின்றனர்.

எஸ். எஸ். ஜெயின் கல்விக் கழகம், இராஜஸ்தானியரால் நிறுவப்பட்டு அதன் மூலம் ஒரு கல்லூரியும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும், மூன்று தவக்கப் பள்ளிகளும் நடத்தப்பட்டுவருகின்றன.

மேலும், இராஜஸ்தானியரால் ஒரு மகப்பேறு விடுதியும் 20 மருத்துவர்களும் சென்னை நகரில் நடத்தப்படுகின்றன.

இந்த விறுவன்களின் மூலம் இராஜஸ்தானியர் மட்டுமன்றி, ஏராளமான ஏழை மக்களும் பயனடைந்துவருகின்றனர்.

'சிவ சேனை'க்கு மாநில அரசு ஆதரவு?

தடை செய்யும் எண்ணம் இல்லையென்கிறார் நாயக்!

பம்பாய், பிப். 8—

"சிவ சேனையைத் தடை செய்ய வேண்டிய அவசியமிருப்பதாக மராட்டிய மாநில அரசு கருதவில்லை"

என்று அம்மாநில முதல்வர் வி. பி. நாயக், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், அவர் தெரிவித்த தாவது:—

"சிவசேனையைத் தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை யானது, வெறி மாநிலைதவறிமிருந்தே வந்தது."

"வி. கிருஷ்ணமூர்த்தி, உமாநாத் ஆகிய தமிழகத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பம்பாய் வந்து போனபின் வெளியிட்ட அறிக்கை உண்மை நிலைமையை அடிப்படையாகக் கொண்டதல்ல" என்றும் அவர் தெரிவித்தார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எல்.

திருவள்ளுவராண்டு 1999 தை 26 (9—2—68) வெள்ளி

சனநாயகம்--பீகார் பதிப்பு!

பீகார் மாநிலத்தில் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் மகாமாய பிரசாத் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசல்லாத கூட்டு அமைச்சரவை அமைந்திருந்தது. அதே அமைச்சரவையில் அமைச்சராக இடம் பெற்றிருந்த பிந்தேசுவரி பிரசாத் மண்டல் என்ற முன்னாள் காங்கிரசுக்காரர், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன், கூட்டு அமைச்சரவையை வீழ்த்தினார்.

கூட்டு அமைச்சரவையை வீழ்த்துவதற்குத் தமக்கு அருந்துணைபுரிந்த அதே காங்கிரசுக் கட்சியினர் ஆதரவுடன், புதிய அமைச்சரவையை மண்டல் அமைத்திருக்கின்றார். காங்கிரசுக் கட்சியினரின் ஆதரவு இருக்கின்றவரையில், மண்டல் அமைச்சரவையும் இருந்துவரும்; அந்த ஆதரவு அகன்றதும் இந்த அமைச்சரவையும் இருந்த இடம் தெரியாமல் கவிழ்ந்துபோகும்.

தமது அரசியல் பூர்வாஸ்ரமமான காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகி மண்டல், காலஞ்சென்ற டாக்டர் லோகியாவின் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியில் இடம் பெற்றார். சென்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டு அமைச்சரவையில் தமக்கும் ஒரு அமைச்சர் பதவி கிடைக்கவே, நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க மண்டல் விரும்பவில்லை; ச. சோ. கட்சித் தலைவர் கட்டளையிட்டும்கூட, நாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்பட விரும்பாமல் மாநில அமைச்சராகவே இருக்க முடிவு கட்டிக்கொண்டார். கட்சிக் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டமைக்காக ச. சோ. கட்சியிலிருந்து அவர் விலக்கப்பட்டுவிட்டார்.

தமது கூட்டு அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இடம் கொடுத்திருந்த முதலமைச்சரான மகாமாய பிரசாத், 'தேர்தலுக்கு நின்று சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என மண்டலைக் கேட்டுக்கொண்டார். முதலமைச்சரின் அந்த வேண்டுகோளை மண்டல் அலட்சியப்படுத்தியதுடன், தொடர்ந்து ஐந்து மாத காலம் அமைச்சர் பதவியில் ஒட்டிக்கொண்டிருந்தார். அதற்கு மேலும் அப்பதவியிலிருக்கச் சட்டம் அனுமதிக்காததால், மண்டலைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டார் முதலமைச்சர்.

அமைச்சர் பதவியிலிருந்து தாம் விலக்கப்பட்டுவிட்டதனால் தமக்கு ஏற்பட்ட ஆத்திரத்தின் காரணமாக, 'பிரசாதின் கூட்டு அமைச்சரவையை எப்படியும் கவிழ்த்துவிட வேண்டும்' எனக் கங்கணம் கட்டிக்கொண்டார்; மண்டலின் இந்தப் பழி வாங்கும் பணிக்கு, கூட்டு அமைச்சரவையைக் கவிழ்க்கும் வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்த காங்கிரசுக் கட்சி, மிக்க மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பு அளித்தது. சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து கூட்டு அமைச்சரவையைக் கவிழ்த்துவிட்டார் மண்டல்.

காங்கிரசுக் கட்சியின் பரிந்துரைப்படி, இப்பொழுது மண்டல் முதலமைச்சராக இருந்துகொண்டு பீகாரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். இப்பொழுது அவர், சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினராக ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்.

முதலமைச்சராக உள்ள மண்டல், தமக்கென ஒரு புதுக் கட்சியைத் தோற்றுவித்திருக்கிறார்; அந்தக் கட்சிக்குப் பெயர் 'சோஷித் தளம்' என்பதாகும்.

மண்டலின் புதிய கட்சியான 'சோஷித் தளம்' எந்தக் கொள்கை அடிப்படையிலும் உருவாக்கப்பட்டதல்ல; மற்ற அரசியல் கட்சிகளிலிருந்து ஏமாற்றமடைந்து வெளியேறியவர்களைக் கொண்ட பதவிப் பித்தர்களின் குவியலேயாகும்.

மண்டலின் இப்புதிய கட்சியில் மொத்தத்தில் 39 நபர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது; இப்பொழுது இவர்களில் 35 நபர்கள், மண்டல் உட்பட அமைச்சர்களாகப் பதவி பெற்றுவிட்டனர். காபினட்-ஸ்டேட்-துணை-என்ற மூன்று பிரிவுகளைச் சேர்த்து மொத்தத்தில் 35 அமைச்சர்கள், மண்டல் அமைச்சரவையில் உள்ளனர்; அக்கட்சியைச் சேர்ந்த எஞ்சிய நால்வரும், இப்புதிய அமைச்சரவை கவிழ்ந்துபோவதற்குள்ளாக அமைச்சர்களாக ஆக்கப்பட்டுவிடுவர் என எதிர்பார்க்கலாம்.

மண்டலின் அமைச்சரவைத் துவக்கமே, 'அமைச்சரவைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்பதைக் காட்டும் அறிகுறியாக அமைந்திடவில்லை. முதலமைச்சர் மண்டலால் அறிவிக்கப்பட்டவர்களில் இரண்டு அமைச்சர்களும், 3 துணை அமைச்சர்களும் வாக்குறுதி எடுத்துக்கொள்ளுவதற்குக் குறிப்பிடப்பட்டிருந்த நாளில் வரவில்லை. 'அழைப்புக் கடிதம், காலத்தில் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை' என, அந்த ஐவரும் வராததற்கு மண்டல் கூறும் காரணம் பொருந்தக்கூடியதாக இல்லை.

மகாமாய பிரசாத் அமைச்சரவைமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 13 வாக்கு வித்தியாசத்தில்தான் நிற்றவேறியிருக்கிறது; இந்த எண்ணிக்கை வித்தியாசத்தை ஒரு பொருட்டாக மதிப்பிடுவதற்கில்லை. நாளைக்கே இந்தப் பதின்மூன்று பேர்களில் சிலர், எதிர்க் கட்சியுடன் சேர்ந்துவிடக்கூடும். அப்படி ஒரு நிலை ஏற்படும்பட்சத்தில், பிரசாத் அமைச்சரவைக்கு ஏற்பட்ட முடிவுதான் மண்டல் அமைச்சரவைக்கும் ஏற்படும் என்பது உறுதி.

மண்டல் அமைத்துள்ள அமைச்சரவையில், மூன்று துறவிகள் கூட இடம் பெற்றிருக்கின்றனர். அனைத்தையும் துறந்துவிட்ட இம்மூன்று துறவிகளைக்கூட, அமைச்சர் பதவி பற்றிக் கொண்டிருப்பது வியப்புக்குரியதுதான்.

மண்டல் அமைச்சரவையை உருவாக்கியது காங்கிரசுக் கட்சி; அந்த அமைச்சரவையை ஆதரித்துவர ஒப்புக்கொண்டிருப்பதும் காங்கிரசுக் கட்சி; ஆனால், மண்டல் அமைச்சரவையில் அமைச்சர்களாகப் பதவி பெறுவதைமட்டும் காங்கிரசுக் கட்சி விரும்பவில்லை.

காங்கிரசுக் கட்சியின் இம்முடிவிலிருந்தே, மண்டலின் அமைச்சரவைக்கு அக்கட்சி தரக்கூடிய ஒத்துழைப்பு எத்தகையதாக இருந்திடக்கூடும்--எத்தனைக் காலத்திற்கு இருந்திடக்கூடும் என்பதை யூகித்துக்கொள்ளலாம்.

பாராளுமன்ற சனநாயக ஆட்சி முறையை—பீகாரில் அமைச்சரவையை அமைப்பதன் மூலம்—பிந்தேசுவரி பிரசாத் மண்டல் இழிவுபடுத்துகின்றார்--சீர்குலைக்கின்றார். இதை நினைக்கின்ற பொழுது உண்மையான சனநாயக உணர்ச்சியில் நம்பிக்கையுடையவர்கள் கண்ணீர் சிந்தத்தான் செய்வர்!

—கா. க.

சட்டமன்ற மேலவையில் காலியாகும் இடங்கள்

23 புதிய உறுப்பினர்கட்கு வாய்ப்பு

சென்னை, பிப். 9—

தமிழகச் சட்டமன்ற மேலவையில் ஏப்ரல் 20-ஆம் நாளுடன் 18 உறுப்பினர் பதவிக்காலம் முடிவடைகிறது. இவர்களுடைய இடங்களை நிரப்புவதற்கான தேர்தல் மார்ச்சு—ஏப்ரலில் நடைபெறவிருக்கிறது.

இத்தேர்தலுக்குப் பின், மேலவையில் காங்கிரசுப் பெரும்பான்மை குறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாண்டுக்கு ஒருமுறை, மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்து மறுதேர்தல் நடக்கும்.

தேர்தல்மூலம் வந்த 18 உறுப்பினர்களின் பதவிக்காலம் மட்டுமின்றி, கவர்னரால் நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்களின் பதவிக்காலமும் முடிவடைகிறது; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார், திருமதி டி. எல். திரிபுரசுந்தரி, திரு. எஸ். டி. சுந்தரம் ஆகிய நியமன உறுப்பினர்களின் பதவியும் ஏப். 20-ஆம் நாள் முடிகிறது.

இதைத் தவிர திரு. ஆர். வெங்கட்ராமன் திட்டக் குழு உறுப்பினராகிவிட்டதால், ஓர் இடம் காலியாக உள்ளது.

டாக்டர் ஏ. சிதம்பரநாதன் காலமானதால் ஓர் இடம் காலியாக உள்ளது.

சட்டமன்ற மேலவைக்கும், நாடாளுமன்ற மேலவைக்கும் வாக்களிக்கும் தொகுதி சட்டமன்றமே ஆகும்; அதன் அமைப்பு கட்சிவாரியாக—தி. மு. க. 137; காங்கிரசு 49; சுதந்தரா 20; இடது கம்யூனிஸ்டு 11; வலது கம்யூனிஸ்டு 2; பி. சோ. 4; வீக் 3; ச. சோ. 2; சுயேச்சை 2; பார்வர்டு பிளாக் 1; குடியரசு 1; தமிழரசுக் கழகம் 1; காலி இடம் 1; அவைத் தலைவர் 1.

மேலவையில் ஏப்ரல் 20-ல் விலகவேண்டிய உறுப்பினர்களின் பெயர்களும் அவர்கள் தொகுதிகளும் வருமாறு:—

உள்ளாட்சிமன்றத் தொகுதி

இராமநாதபுரம்:—எஸ். செயராம ரெட்டியார், எஸ். ராசமார்த்தாண்டம்.

தஞ்சை:—ஏ. சாம்பசிவ ரெட்டியார், ஆர். வெங்கடாசலம்.

சென்னை:—அறிஞர் அண்ணா.

பட்டதாரிகள் தொகுதி

சென்னைக் கிழக்கு மையப் பட்டதாரிகள் (தஞ்சை, திருச்சி):—கே. பாலசுப்பிரமணியம்.

சென்னை மேற்கு மையப் பட்டதாரிகள் (சேலம், கோவை):—டாக்டர் டி. வி. சிவானந்தம்.

ஆசிரியர் தொகுதிகள்

சென்னை--செங்கற்பட்டு ஆசிரியர்கள்:—க. அறிவழகன்.

மதுரை--இராமநாதபுரம் ஆசிரியர்கள்:—எம். இராசா அய்யர்.

சட்டமன்றத் தொகுதி

கே. எஸ். அப்துல் வகாப், ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், வி. கே. பழனிசாமி கவுண்டர், ஜே. பொன்னுசாமி வில்லவராயர், எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார், கே. இராஜாராம் நாயுடு, கே. இராமதாஸ்.

காங்கிரசுக்கு ஆதரவாக மேற்கு வங்கக் கவர்னர்

கோஷ் அமைச்சரவையைக் கவிழ்க்க திரைமறைவு வேலை?

தலைமையமைச்சருக்கு அவசர 'ஓலை' அனுப்பியிருக்கிறாராம்

கல்கத்தா, பிப். 9—

"பி. சி. கோஷ் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவைக்கு 'மெஜாரிட்டி' இல்லை" என்று மேற்கு வங்கக் கவர்னர் தர்மவீரா கருதுகிறாராம்; இது குறித்து தலைமையமைச்சர் இந்திராவுக்கு அவர் அவசரத் தகவல் அனுப்பியுள்ளாராம்.

"காங்கிரசு கூட்டுச் சேர்ந்துள்ள மேற்கு வங்க அமைச்சரவை, பெரும்பான்மை ஆதரவை இழந்துவிட்டது; மாநிலத்தின் அரசியல் பெரிதும் பலவீனமடைந்துள்ளது; காங்கிரசுக் கட்சியிலும் ஐக்கிய முன்னணியிலும், மற்றக் கட்சிகளிலும் உட்பூசல் அதிகரித்துவிட்டதன் காரணமாக மாநிலத்தில் நிலையான ஆட்சி நடைபெறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை"

என்று கவர்னர், தமது அவசரத் தகவலில் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

தற்போதைய நிலையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் தலைமையமைச்சரிடம் ஆலோசனை கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கவர்னரின் அவசரத் தகவல் ஒரு தனி அதிகாரியின்மூலம் இந்திராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாநிலக் காங்கிரசுக் கட்சியுடன் கருத்து வேறுபாடு கொண்ட மேலவை காங்கிரசு உறுப்பினரான அசுதோஷ் கோஷ், 'மேற்கு வங்கத்தில் பி. சி. கோஷ் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவைக்குப் பெரும்பான்மை குறைந்துவிட்டது' என்பதை நிரூபிக்கும் வகையில், தம்மை ஆதரிக்கும் எம்.எல்.ஏ.-க்களின் பட்டியலை கவர்னரிடம் அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

"மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்து, பின்னர், மறுதேர்தல் நடத்துவது ஒன்றுதான் தற்போதுள்ள அரசியல் குழப்பங்களுக்குச் சரியான தீர்வு ஆகும்"

என்று கவர்னர் தர்மவீரா, தமது அவசரக் கடிதத்தில் கருத்துத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றித் தலைமையமைச்சர் இந்திரா, இதர அமைச்சர்களுடன் கூடிப் பேசி முடிவு எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டணி அரசைக் கவிழ்த்ததற்குக் கைமேல் பலன்!

'முன்னாள் காங்கிரசு அமைச்சர்கள்மீது விசாரணை வேண்டாம்'--புதிய முதலமைச்சரிடம் காங்கிரசுக்காரர் 'காவடி'!

புதுடில்லி, பிப். 9—

பீகாரில் மகாமாய பிரசாத் தலைமையில் அமைந்திருந்த கூட்டணி அரசு, முன்பு இருந்த காங்கிரசு அமைச்சர்கள் ஆறு பேர்களின் 'நடத்தை' பற்றி விசாரணை செய்ய ஒரு குழு அமைத்திருந்தது அல்லவா? அந்தக் குழுவை உடனடியாக நீக்கிவிடுமாறு புதிதாக அமைந்துள்ள மண்டலின் அமைச்சரவைக்குக் காங்கிரசுக் கட்சி ஆலோசனை கூறியுள்ளதாம்.

காங்கிரசின் பக்கபலத்துடன் தான் மண்டல், அமைச்சரவை அமைக்கமுடிந்தது என்பது தெரிந்ததே.

மத்திய காங்கிரசுத் தலைவர்களும், மாநில காங்கிரசுக்காரர்களும் இவ்வாறு ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் மாநிலக் காங்கிரசிலுள்ள மற்றொரு பிரிவினர், 'இந்த விசாரணையை மேலும் விரிவாக்க வேண்டும்' என்றும், 'முன்னாள் முதலமைச்சர்களான பினோதானந்த ஜா, மகாமாய பிரசாத் சின்கா ஆகியோர் மீதும் விசாரணை நடத்தவேண்டும்' என்றும் வலியுறுத்தி வருவதாகத் தெரிகிறது.

உமாயூன் கபீரின் புதிய 'வேடம்'!

கல்கத்தா, பிப். 9—

உமாயூன் கபீர் விரைவில் ஒரு புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்கப்போவதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த ஜன காங்கிரசுத் தலைவர் அரிகிருஷ்ண மேதாப்புடன் அவர் ஆலோசித்து வருகிறார்.

இந்தப் புதிய கட்சிக்கு, 'லோக் தளம்' எனப் பெயரிடப்படும் என்று கூறப்படுகிறது.

தான் செய்த வினை தன்னையே தாக்குகிறது

துணைக்கு வந்த காங்கிரசு துரோகம் செய்ய முனைகிறதாம்

மேற்கு வங்க கவர்னர்மீது முதலமைச்சர் குற்றச்சாட்டு

கல்கத்தா, பிப். 8—

"மேற்கு வங்கக் கவர்னர் தர்மவீராவை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று மாநில முதல்வர், தலைமையமைச்சர் இந்திராவுக்கு இரகசியக் கடிதம் எழுதியுள்ளார்.

"கவர்னர் தர்மவீரா மாநில அரசியலில் தலையிட்டு வருகிறார்; காங்கிரசுக் கூட்டுடன் புதிதாக அமைந்துள்ள அமைச்சரவையைக் கவிழ்க்கும் வகையில் அசுதோஷ் கோஷுக்கு அவர் மறைமுகமாக உதவி வருகிறார்; தமது பதவிக்கும் பொறுப்புக்கும் பொருந்தாத வகையில் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டு மாநிலத்தில்

(3-ம் பக்கம் பார்க்க)

சென்னைத் தொழிற் சங்கப் பொன்விழா

அன்பர்கட்கு வேண்டுகோள்

சென்னைத் தொழிலாளர் சங்கம் (மதருஸ் லேபர் யூனியன்) அதன் 50-வது ஆண்டு (பொன்)விழாவை வரும் ஏப்ரல் மாதம் 27, 28 ஆகிய தேதிகளில் சிறப்பாகக் கொண்டாட முடிவு எடுத்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் கண்ட இந்த முதல் சங்கத்துடன் தொடர்புகொண்ட பழம்பெரும் தேசபக்தர்கள்—அதன் வளர்ச்சியில் நாட்டங்கொண்ட அரசியல் வாதிகள்—தொழிற்சங்கப் பிரமுகர்கள், தங்களது தொழிற் சங்க அனுபவக் குறிப்புக்களையும், அதன் தலைவர்களைக் குறித்து—அதன் சாதனைகள் பற்றியும், இந்தியத் தொழிற்சங்கச் சரித்திரத்தில் சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் பங்கு முதலான நினைவுக் குறிப்புகளையும், வாழ்த்துச் செய்திகளையும் எழுதியனுப்பி, பொன் விழாவன்று வெளியிடும் சிறப்பு மலரில் வெளியிடும் வாய் பினைத் தந்து சரித்திரஏடுகளை உண்டாக்க உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

"அதன் துவக்கக் காலத் தலைவர்களில் ஒருவரான திரு. வி. க. அவர்களின் சிலையைச் செய்து வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது" என்று பொதுச்செயலாளர் திரு. எஸ். பக்கிரிசாமி பிள்ளை அறிவிக்கிறார்.

திருச்சி மாவட்ட பாரம் சுமக்கும் தொழிலாளர் சங்கம்

திருச்சி மாவட்ட பாரம் சுமக்கும் தொழிலாளர் சங்கப் பேரவைக் கூட்டம், தோழர் கே. பி. எஸ் கோன் தலைமையில் 4—2—68-ல் கூடியது.

1967—68-ம் ஆண்டின் சங்க வரவு - செலவுக் கணக்குகள் பரிசீலித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : கே. பி. எஸ். கோன்; துணைத் தலைவர்கள் : பி. செல்லக் கோனார், கே. பெரியசாமி; செயலாளர் : எம். செல்லப்பன்; துணைச் செயலாளர்கள் : ஆர். பார்த்தசாரதி, எம். மாரப்பன்; பொருளாளர் : என். மாரியப்பன்.

8-வது சங்க ஆண்டு விழாவை 5—5—68-ல் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முகாசிப்புதூரில் தாழ்த்தப்பட்டோர் நாள் விழா

27—1—68 அன்று அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முகாசிப்புதூரில் தாழ்த்தப்பட்டோர் நாள் விழா, ஊராட்சி தலைவர் டி. எஸ் பொங்கியா தலைமையில் நடைபெற்றது.

ஈரோடு தாழ்த்தப்பட்டோர் நலத் துறை தாசில்தார் பி. கே. முத்துசாமி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையர் பி. ஏ. எல். சாலமன் பி ஏ., கல்வி விரிவாக்கு அலுவலர் எம். துரைராஜ் திருமதி திலகவதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்; குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வலியுறுத்தினர்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், சுகாதார முறையில் வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும், சுத்தமான முறையில் வீடுகளை வைத்திருப்பவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

திரு. கே. ஆர். பழனிசாமி நன்றி நவின்றார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படும்படியான சூழ்நிலையை உருவாக்க முயலும் கவர்னரை மத்திய அரசு உடனடியாகத் திரும்ப அழைத்துகொள்ள வேண்டும்" என்று மேற்கு வங்க முதலமைச்சர் பி. சி. கோஷ் தலைமையமைச்சருக்கு எழுதிய இரகசியக் கடிதத்தில் வற்புறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

வீர வணக்கக் கூட்டங்கள்

நாகர்கோயிலில் :

25-1-68 அன்று நாகர்கோயில் நகர தி. மு. க. சார்பில் இந்தி எதிர்ப்பில உயிர்நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

அன்று மாலை 7-மணிக்கு, நாகர்கோயில் நாகராசா திடலில் நடந்த வீர வணக்கப் பொதுக்கூட்டத்திற்கு தோழர் என். கோபால கிருட்டினன் தலைமைதாங்கினார்; தோழர்கள் கி. மனோகரன் எம் ஏ., எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம். சி. பாலன் பி.ஏ., பி.எல்., ஜி. சி. மைக்கேல்ராசு பி.எஸ்சி.,பி.எல்., பொதுக்குழு உறுப்பினர் சு. வன்னியப் பெருமாள் ஆகியோர் பேசினர்.

நாகர்கோயில் நகர 22-வது வட்ட தி. மு. க. சார்பில் 28-1-68 அன்று கழகக் கொள்கை விளக்கப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

• தோழர் கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., மற்றும் பலர் கொள்கை விளக்கம் அளித்தனர்.

செந்தாரப்பட்டியில் :

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த செந்தாரப்பட்டியில் மொழித் தியாகிகட்கு வீர வணக்கம் செலுத்தும் பொருட்டு கல்லூரி, பள்ளி மாணவர்கள் 25—1—68 காலையில் மாபெரும் மவுன ஊர்வலம் நடத்தினர்; மாலையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; மாணவர் தலைவர் கி. இராசேந்திரன் தலைமை வகித்தார்; வீ. தியாகராசன், மொ. அ. பாவா புகருதீன், அ. இராசேந்திரன், க. திவாகரன் ஆகியோர், 'மொழிச் சிக்கலில் மாணவர்கள்' என்ற தலைப்பில் பேசினர்.

முசிறியில் வெற்றி விழா

முசிரி நகர தி மு. க. சார்பில் இந்தி ஒழிந்த வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது; பி. காத்தலிங்கம் தலைமைவகித்தார்; பி. எஸ். முத்துச்செல்வன் பி ஏ., எம்.எல்.ஏ., ஆ. துரைராசு எம்.பி., எம. பி. நடராசன், எம். வி. ராதா, புலவர் பொன்னிவளவன் ஆகியோர் இந்தி ஆதிக்கம் காரணமாக உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திப்பேசினர். தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேங்காம்பட்டி இளமுருகு பொற்செல்வி கலை மன்றம்

குளித்தலை வட்டம் வேங்காம்பட்டியில் உள்ள இளமுருகு பொற்செல்வி கலை மன்ற நிர்வாகிகள் தேர்வு திரு. ஆர். பி. சாமி தலைமையில் நடைபெற்றது; நிர்வாகிகள் விவரம் :—தலைவர்கள் : பெ. ஆறுமுகம், கு. சண்முகம்; செயலாளர்கள் : ஆ. மாரியப்பன், வை. கலிய பெருமாள்; பொருளாளர் : பெ. கருப்பன்; செயற்குழுவினர் 4 பேர்.

கலைமன்ற ஆண்டு விழாவை பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களை அழைத்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தஞ்சை எம். ஜி. ஆர். மன்றம்

தஞ்சை 16-வது வட்ட எம் ஜி. ஆர். மன்ற உறுப்பினர் கூட்டம் 4—2—68 அன்று கே. குருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது: அது போது, டி. கே. மூர்த்தி தலைவராகவும், இரா. கருப்பையன் செயலாளராகவும், டி. டி. ஏ. ஜபார் துணைச்செயலாளராகவும், டி. எம். உஸ்மான் பொருளாளராகவும், ஏ. எம். அக்பர் துணைப் பொருளாளராகவும், டி. ஏ. கபார், வி ஜி. மூர்த்தி மேற்பார்வையாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 11 பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

உலக இலக்கியங்களை ஆளும் குறள்

அரூர் தமிழ் வளர்ச்சி மன்ற ஆண்டுவிழாவில் விளக்கம்

தர்மபுரி மாவட்டம் அரூர் தமிழ் வளர்ச்சி மன்ற ஆண்டு நிறைவு விழாவும், திருக்குறள் வகுப்பு—அறத்துப்பால் நிறைவு விழாவும் திரு. கோ. மு. மாதவன் பி.ஏ. (ஆனர்சு) பி.டி. தலைமையில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் மணிவேலன் பி ஏ.பி.டி. அனைவரையும் வரவேற்றார்; பொதுச் செயலர் இரா.வேங்கடம் ஆண்டறிக்கை படித்தார்.

தலைவர் தமது உரையில், தமிழ் மன்றங்கள் நாடெங்கிலும்—ஊர் தோறும் திறக்கப்படல் வேண்டுமென்றும், தமிழுக்காகவும்--தமிழரின் பண்பாட்டிற்காகவும்--அதை காப்பதற்காகவும், மாநாடுகளும் விழாக்களும் கொண்டாடப்படல் வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பேராசிரிவர் எம். குமாரசாமி எம்.ஏ., 'அறத்துப்பாலும், பிற அற நூல்களும்' என்ற தலைப்பில் பேசுகையில், 'தமிழ், தமிழாசிரியர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல--அனைவருக்கும் சொந்தமானது; அதைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும்' எனறார்.

அரூர் காவல்துறைத் துணை ஆய்வாளர் கோவிந்தன் பி ஏ. பேசுகையில், திருக்குறள் முழங்கும் இடங்களிலெல்லாம் என் முகம் தெரிய வேண்டும் என்னும் விழைவு உடையவனென்றும், தமிழ்மீது பற்றில்லாதவன் தமிழ் மகனாகமாட்டான் என்றும் குறிப்பிட்டார்.

சேலம் முருகுசுந்தரம் எம்.ஏ., 'தமிழ் இலக்கியங்களை மட்டுமல்லாமல் உலக இலக்கியங்களையும் குறள் ஆட்சி செய்கிறது' என்று கூறி பல எடுத்துக்காட்டுகள் காட்டிப் பேசினார்.

புலவர் இராகவேந்திரன் நன்றி கூறினார்.

தமிழக அரசுக்கு முன்னாள் இராணுவத்தினர் சங்கக் கோரிக்கை

குன்னூர் வட்ட முன்னாள் இராணுவத்தினர் பொதுக்கூட்டம் திரு. கே. பி. முருகேசன் 14—1—68 அன்று நடைபெற்றது.

கேப்டன் கண்ணுசுவாமி, கே. எஸ். இராம்நாத், பி டி. செல்வ குரூஸ், மற்றும் பலர் பேசினர்.

திரு. முருகேசன் பேசுகையில், முன்னாள் இராணுவத்தினர் அனைவரும் ஒற்றுமையுடன் சங்கத்தை வளர்க்க வேண்டுமென்றும், நமது அரசு முன்னாள் இராணுவத்தினருக்கு ஆவன செய்யும் என்றும் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத்தினர் சங்கத்திலிருந்து பிரதிநிதித்துவம், இராணுவ போர்டில் கிடைக்க வேண்டுமென்றும், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்க வேண்டுமென்றும், அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கும் முன்னாள் இராணுவத்தினருக்கு அந்த நிலங்களை 'பட்டா' செய்து கொடுத்தல் வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

வீடு இல்லாத முன்னாள் இராணுவத்தினர் உடனடியாகத் தங்கள் பெயர்களைக் குன்னூர் தாலுகா முன்னாள் இராணுவச் சங்கத்தில் பதிவு செய்யும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

டி. குண்ணத்தூர் தி. மு. கழகம்

டி. குண்ணத்தூர் தி.மு.க. கிளையின் நிர்வாகிகள் இடைத்தேர்தல் வட்டச் செயலாளர் உ. மா. கண்ணுசாமியை ஆணையாளராகக் கொண்டு 9—1—68-ல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : எல். கே. நாராயணசாமி; செயலாளர்: இரா. கருப்பையா; துணைச் செயலாளர்: ச. சங்கரபாண்டியன்; பொருளாளர் : எஸ். இராசகோபால்; வட்டப் பிரதிநிதி: ரா. சவுண்டையா; மற்றும் 10 பேர் செயற்குழு உறுப்பினர்.

தஞ்சை மாவட்டத்தில் நடந்துவரும் வேளாண்மைப் புரட்சி

'மேலும் 6-இலட்சம் ஏக்கர் இரு போக நிலமாக மாறும்'--அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அறிவிப்பு

சென்னையில் நடந்த தீவிரச் சாகுபடித் திட்டக் கருக்தரங்கில் தமிழக வேளாண்மைத் துறையமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

"ஒரு போக நிலத்தை இரு போகமாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் திட்டத்துக்குத் தஞ்சை மாவட்ட விவசாயிகள் அளித்துள்ள ஒத்துழைப்புக் குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஒத்துழைப்பின் காரணமாகக் கடந்த பருவத்தில் கணிசமான நிலப்பரப்பு இரு போக நிலங்களாக மாறின.

பருவ மழை தவறாது பெய்தால், நடப்பு ஆண்டில் தஞ்சையில் 6-இலட்சம் ஏக்கர் நிலத்தை இரு போகச் சாகுபடி நிலமாக மாற்றிட இயலும்.

பருவ மழை தவறினாலும் விவசாயம் குன்றக்கூடாது என்பதற்காகத் தரைக்கடியில் கிடைக்கும் நீரை எடுத்துப் பெரும் அளவில் பயன்படுத்த வேண்டும்; அதற்கான திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்திவருகிறது; தஞ்சை மாவட்டத்திலும் சில பகுதிகளில் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின் பலனை அடைந்துவருகிறார்கள்."

மத்திய அதிகாரி

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்க வந்துள்ள மத்திய உணவுத் துறை அதிகாரிகள் சார்பில் பி. பி. ஐ. வைத்தியநாதன் வாழ்த்துரை கூறிப் பேசியதாவது :—

"'உணவு உற்பத்திக்கான எந்த ஒரு திட்டமும் வெற்றி பெற வேண்டுமானால், மாநில அரசின் ஒத்துழைப்பும் முதலமைச்சராக உள்ளவரின் ஒத்துழைப்பும் அதற்கு இருந்தாலே முடியும்' என்று மறைந்த நேரு அடிக்கடி சொல்லுவார்; தமிழக அரசும் அதன் முதலமைச்சரும், அத்தகைய ஒத்துழைப்பைத் தந்து வருகின்றனர்.

மத்திய அரசின் உணவுத் துறையைப் பொறுத்தமட்டில், அவசியமான உதவிகளை அளித்திட அது ஒருநாளும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

போர்டு நிறுவன அதிகாரி

போர்டு நிறுவனத்தின் சார்பில் டாக்டர் டக்ளஸ் என்ஸ்மிங்கர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இந்தியா உணவு உற்பத்தியில் தோல்வி கண்டுவிட்டது என்று வெளிநாடுகளில் ஒரு தவறான எண்ணம் நிலவுகிறது. உண்மையில், இந்தியா ஒரு பெரும் விவசாயப் புரட்சியில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

1952-லிருந்து கணக்கெடுத்தோமானால், கடந்துபோயிருப்பது 16 ஆண்டுகள்; இந்தியா போன்ற பெரிய நாட்டுக்கு 16 ஆண்டுகள் என்பது அதிகமல்ல!

தஞ்சையின் தீவிரச் சாகுபடித் திட்ட வெற்றிகள் எதிர்காலத்தில் வரவிருக்கும் வெற்றிகளை அறிவிக்கும் ஒளியாகத் திகழ்கிறது. இன்னும் ஆறு அல்லது எட்டு ஆண்டுக் காலத்தில் இந்தியா தனக்குத் தேவையான உணவைத் தானே உற்பத்தி செய்யும் ஆற்றலைப் பெற்றுவிடும்.

தஞ்சையைப் பொறுத்தமட்டில், 'அங்கு தற்போது காணப்படும் கூலிப் பிரச்சினை இதற்குத் தடையாக இருக்கிறது' எனச் சிலர் கூறக்கூடும்; ஆனால், நாம் ஒன்றை உணரவேண்டும்; வறுமையை யாராலும் முறியடிக்க முடியாது! வளமையைத்தான் நாம் பங்கிட்டுக்கொள்ள முடியும்!"

புதுக்குடியில் ஏர்முனை விழா

20—1—68 மாலை 5 மணியளவில், திரு. தா. கிருஷ்ணன் எம்.பி., திரு. டி. கே. சிறைமீட்டான் எம்.எல்.ஏ. ஆகியோரின் தொகுதிச் சுற்றுப்பயணத்தையொட்டி, புதுக்குடியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தி.மு.க. கிளை மூலம் விவசாயிகள் தந்த கண்மாய் மராமத்து—மடைகட்டுதல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஆர்வத்தோடு பெற்று ஆவன செய்வதாக—விவசாயிகள் உளமகிழ உறுதிதந்தனர்.

திரு. கிருஷ்ணன் கொடியேற்றி வைத்தார்; அவைத் தலைவர் இரா. முத்துச்சாமி பொங்கல் வழங்கினார்.

பம்பாய்த் தமிழ் மாணவர் மன்ற 12-வது ஆண்டு விழா

பம்பாய்த் தமிழ் மாணவர் மன்ற 12-ம் ஆண்டு விழா, 21—12—68ல் தாராவி கணேசர் ஆலயத்தில் நடைபெற்றது.

மன்றப் பொறுப்பாளர் இர. இராசாமணி விழாவினைத் தொடங்கிவைத்தார்; எஸ். தியாகராசன் தலைமைவகித்தார்; கே. பன்னீர்செல்வம் 'அரும்பு' மலரைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றினார்; ஜே. வி. ஞானையாநீல், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பள்ளி, கல்லூரி மாணவ—மாணவிகள் சிறப்பாகச் சொற்பொழிவுகள் ஆற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கீரப்பாளையத்தில் காந்தி நினைவுநாள்

30—1—68 அன்று கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எண்ணநகரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் நல வார விழாவும், காந்தி நினைவு நாள் விழாவும் கொண்டாடப்பட்டது. கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மு. அனந்தபத்மநாபன் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் ஆ. கோவிந்தராசன், தில்லைவில்லாளன் எம்.ஏ.பி.எல்., சிதம்பரம் வழக்கறிஞர் பொ. கலிய பெருமாள், காந்தியவாதியும் பெருநிலக்கிழாருமான என். இராமலிங்கம், பூந்தோட்டம் ஊராட்சித் தலைவர் ஆர். பூவராகமூர்த்தி, சுகாதார ஆய்வாளர் எஸ். வி. சுப்பிரமணிரம் மற்றும் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் நா. இராசப்பன் எம்.ஏ., தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் குறித்தும், தாழ்த்தப்பட்ட மக்களோடு எவ்வாறு மற்ற இனத்தவர்கள் பழகித் தீண்டாமையை ஒழிக்க வழிகோலுவது என்பதையும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காகக் காந்தியார் என்னென்ன வழிகள் செய்துவிட்டுச் சென்றுள்ளார் என்றும் விளக்கிப் பேசி, தீண்டாமை ஒழிப்புக்கு ஆதரவு தரும்படி கேட்டுக்கொண்டார்.

என்ன நகரம் கிராம மணியம் அவர்களால், சுத்தமாகப் பேணி வரும் வீடுகளுக்குரிய பரிசுகள் வழங்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றியக் கல்வி வளர்ச்சி அலுவலர் நன்றி நவின்றார்.

திட்டங்களை செயலாக்க ஏற்ற இடம் தமிழ்நாடே!

ஆற்றல்மிக்க அதிகாரி-உழைப்பைக் குவிக்கும் உழவர்கள் இங்கு உண்டு

'வடக்கே கொட்டும் பணத்தை இங்கே கொடுத்து உதவுட்டும்'---டெல்லி அரசுக்கு அண்ணு அறைகூவல்

"தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க, சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 20 கோடி செலவிட்டேண்டும் என்று தெரிவித்து, அதற்கான திட்டம் முழுவதும் அழகுபட அச்சேற்றிப் பத்திரவடிவில் கொண்டுபோய் நான் டில்லியில் கொடுத்துவந்தேன்; ஆனால் இன்றுவரை அதற்கான பதிலே வரவில்லை"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்த தீவிரச் சாகுபடித் திட்டக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறிய தாவது :—

"தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் முற்போக்கானவர்கள் ; நாம் கணக்கைப் போட்டு முடிப்பதற்குள் அவர்கள், கணக்கைப் போட்டு நமக்கே சொல்லுகிறார்கள்! எத்தகைய வகின விவசாய முறைபானாலும் அற்றை ஏற்றுச் செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை! 'மாறிய நீர்க்கு மேற்ப வாதிகளை கொடுத்திடு' என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள்!

தஞ்சை, திருச்சி, வட ஆற்காடு, செங்கற்பட்டு, செல்லை ஆகிய வற்றில் செல வினச்சல் முழு அளவுக்கு ஏற்பபோனால், தமிழகத்தின் இதர மாவட்டங்கின் பருத்தி, கரும்பு, நவதானியங்கள் ஆகியவற்றின் சாகுபடிக்கு என ஒதுக்கிடலாம் ; ஆனால், நிலைமை அவ்வாறில்லை !

ஒரு சில இடங்களில் ஓர் ஏக்கருக்குப் பாசனத்தை ஏற்படுத்த ரூ. 5 ஆயிரம் வரையில் செலவழிக்க வேண்டியிருக்கிறதாக அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தார்கள். இவ்வளவு கிலை செலவழித்து அதற்கேற்ப வரியைப் போட்டால் அதை நம் விவசாயிகள் தாங்குவார்களா? எனவே அரசு நன்னலானதைச் செய்கிற அதே நேரத்தில் தவறக்கூடியில் கிடைக்கும் நிலவிவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தும்படி ஊக்குவிக்க வேண்டும்.

'தரைக்கடியிலிருந்து கிடைக்கும் நீர் தாதச் சத்துக்கள் குறைந்தது' என்று விவசாயிகளிடத்திலே நிலவுகின்ற அவநம்பிக்கை யைப் போக்கவேண்டும்.

ஒருகாலத்தில் இரசாயன உரத்தைப் பற்றிக்கூட இப்படித்தான் கருதப்பட்டது; இன்று அந்த நிலைமை யில்லை! 'கலப்பு உரமா—அதை நாங்களே தயாரித்துக்கொள்கிறோம்; தேவையானதை மட்டும் எங்களுக்குக் கொடுத்தாலும்' என்ற அளவுக்கு விவசாயிகளிடம் உரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்துள்ளது!

தீவிரச் சாகுபடித் திட்டமென்பது, தஞ்சை மாவட்டத்துக்கு மட்டும் உரியதாக இருந்தால் போதாது. மாறில முழுவதும் தஞ்சையை எதிர்பார்ப்பதென்பது இயலாது. எனவே, படிப்படியாகத் தீவிர சாகுபடித் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் பரவவேண்டும். இம்மாலிலம், உபரி மாறில மாக வேண்டுமென்றால், அது ஒன்றே வழி!

எந்தத் திட்டமானாலும், அதைச் சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். தேவையான உற்பத்தி செய்து கொடுத்தால் உற்பத்தி செய்து குவிக்கும் உழைப்பாளர்களாக நமது உழவர்கள் இருக்கிறார்கள்!

மத்திய அரசு தான் நடத்திப் பார்க்க விரும்பும் எத்தகைய மேம்பாட்டை திட்டமாயினும் தமிழகத்தில் வந்து நடத்தட்டும்; வெளி மாலிலங்களில் ஒரு கார்யத்தைச் செய்ய ரூ. 100 செல வாகுமாஞல் இங்கே அதே காரியத்தைச் செய்ய ரூ. 80 தான் செலவாகும்.

முன்னுள் தமிழக முதலமைச்சர் குமாரசாமி ராஜா இதை அப் போதே வலியுறுத்திஞர்—'வடக்கே கொட்டும் பணத்தில் ஒரு பகுதியைத் தமிழகத்திற்குக் கொடுங்கள், உணவு உற்பத்தி யைக் குவித்துக் காட்டுகிறேம்' என்று!

'விவசாயின் அதைச் செய்ய வேண்டும் — இதைச் செய்ய வேண்டும்' என்று கூறினோம், அவர்களுக்குத் தேவையான தைத் தராவிட்டால், அது பசியைக் கிளறிவிட்டுவிட்டு சோறு போடாமல் பட்டினியே போடுவ தற்கு ஒப்பாகும்!

வர்த்தகப் பாங்கினர் விவசாயக் காரியங்களுக்காகக் கடன் வசதி யளிக்கத் முன்வரவேண்டும்.

'விவசாயக் காரியங்களுக்குக் கடன் கொடுக்கிறோம்' என்று வர்த்தகப் பாங்கி ஒன்றின் கிர வாகத்தினர் தெரிவித்தனர்; 'முதலில் செங்கற்பட்டு மாவட் டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்; ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படவேண் டிய கடனுக எட்டரை சதவிகித வட்டியினோடு நிதியுதவி செய் கிறோம் என்று அவர்களே சொன் னார்கள். இதைப் போன்ற விவசாயி கள் ஏற்றுக்கொள்வார்களா ?

குறைந்த வட்டிக்கு 15—20 ஆண்டுகள் தவணை கொடுத்தும் கடன் வசூலாவதிற்கேவேர்த்த தக பாங்கியினருடைய நிபந்தனைகளுக்கா அவர்கள் உட் படப் போகிறார்கள்? என்று லும், இவையெல்லாம் பரிசீலிக் கப்பட வேண்டியவையாகும்.

எப்படியேனும் விவசாயிகளுக்குத் தேவையான கடன், சிக்கலில்லாமல் கிடைக்கவேண்டு மென்பதற்காகச் சில திட்டங் களைத் தயாரித்துவருகிறோம்."

புதுவையில் சிறப்புக் கூட்டம்

அண்ணுவுக்கு வானூறு நூல் வெளியீட்டுக் குழுச் சார்பில் 10—2—68 மாலை 6 மணிக்கு ஒதியஞ்சாலை நகராட்சி அரங் கில், தலைவர்: கவிஞர் ச. சிவப் பிரகாசம்; பொருள்: 'அண்ணு வும் தமிழும்'; பேசவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., அமைச்சர் சாதிக் பாட்சா, கா. வேழவேந்தன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., ஏ.ஏ. ஜின்னு பி.ஏ., எம்.ஏ. சண் முகம்: நன்னெலைப் : ரூ. 1; பெண்களுக்கு 50 காசு.

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு

சென்னை—மயிலாப்பூர் கொச்சிக் குப்பத்தில் உள்ள மாநகராட்சித் துவக்கப் பள்ளியின் துணைக் கட்டி டத்தை நிற. இராம அரங்கண் ணல் எம்.எல்.ஏ. திறந்துவைப் பார்; இந்த விழா, 10—2—68 மாலை 5 மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேச் தலைமையிலும்— நிற. எம். நாகப்பன் முன்னிலை யிலும் நடைபெறும்; வரவேற் பாளர்கள்: டி. தம்பித்துரை எம்.சி., கே. கோவிந்தசாமி எம்.சி.

நாடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--2--68

பம்பாய் —மாதுங்கா

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு இங்தியன் ஜிம்காணு திடலில்; தலைவர்: கவிஞர் ச. சிவப் பிரகாசம்; பொருள்: 'அண்ணு வும் தமிழும்'; பேசவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., அமைச்சர் சாதிக் பாட்சா, கா. வேழவேந்தன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., ஏ.ஏ. ஜின்னு பி.ஏ., எம்.ஏ. சண் முகவேலு, ச. நேவிசு, சே. நாமசு.

பழனி

அண்ணு மறுமலர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்குக் கோட்டைமேடு நேரு திடலில்; பேசவோர்: கோ.சுன்தரம், கே. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., ஒ. முத்துசாமி, டி.கே.எம். யூசுப், மு. சீனான்னும், எல். பழனிச் சாமி, மற்றும் பலர்.

புதுப்பட்டினம்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணு அரங்கில்; தலைவர்: எச். நாரீன்; பேச வோர்: சி. தமிழரசி பி.ஏ., கா. சுப்புவேலு எம்.பி., டி.வி. சம்பத், ஜி.கே. மூர்த்தி, எம்.ஏ. அபீது, ஏ.வி. ஜகரியா. (கோயிலப்பட்டி தேவராசன்—நிாமலா குழுவின ரின கலேநிச்சச்சி உண்டு.)

திருப்பூர்

தி.மா.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளி அருகில்; தலைவர்: க. பொன்னன்; பேசவோர்: எஸ். வெங்கடாசலம் எம்.ஏ., பி.எல்., மு. முத்துரத்தினம், வே.இரா. அரங்கராசு, இரா. முருகேசன்.

மோகனூர்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அழகிரி திடலில்; தலை வர்: ப. சின்னு; பேசவோர்: கோவை மு. இராமாநாதன், கே.ஏ. ஜோதாகிருஷ்ணன், இரா.மு. குருசாமி, எம். சுப்பிர மணியம், வி. மணிவாசகம், கே. வேலுசாமி.

11--2--68

பம்பாய—மாதுங்கா

லேபர் கேம்ப் அண்ணு மன் றச் சார்பில் மாலை 7 மணிக்கு திருவள்ளுவர் திடலில்; தலைவர்: கு. இராமசாமி; கொடியேற்றுபவர்: சி. இரவிந்திரன்; வரவேற்புரை: முகவை அமுதசாரை; அண்ணு படத் திறப்பு: செல்லெ செயிழன்; வள்ளுவர் படத் திறப்பு: ஆரியசங்காரன்; பேச வோர்: கோ. வள்ளுவன், சேலை இரத்தினகுமார், ச. சிங்காரவேலன், எஸ். சுப்பிரமணியம். (தேமுதி எம். மணிமொழியாரின் 'மந்திமா? தந்திரமா?' என்னும் கிகழ்ச்சியும் நடைபெறும்.)

புதுக்குடி

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு என்.எஸ்.கே. பந்தலில்; தலைவர்: எம்.எஸ். கிருஷ்ணன்; பேசவோர்: எஸ். இரத்தினவேலுமாண்டியன் பி.ஏ., பி.எல்., களங்கரை ஜின்னு, கே. எஸ். சுப்பிரமணியம். (கருரொளி கலைக் குழுவினரின் 'கலங்காதே தமிழா' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

பம்பாய்—தாராவி

தாராவி தி.மு.க. சார்பில் காலை 10 மணிக்கு கனேசர் கோயில் அரங்கில்; தலைவர்: த.மு. பொறகோ; வரவேற்பா ளர்: எம் எஸ். முத்து; பேச வோர்: புலவர் அறிவடைமதி, எஸ். தியாகராசன், செல்லெ ச. தங்கையா, க. பனவீர்செல்வம்.

கின்னுஞ்டிபாளையம்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: எஸ். நாசர் முத்து; பேசவோர்: அத்தணாவி பாபு, மெ.சி. தருமணி, சு. துரை

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

பிப். 11: காலை 9 மணி: செய் யாறு ; மாலை 4-30 மணி: வேலூர் கல்லூரி தமிழ் பணியாளர் மாகாடு ; இரவு 7 மணி: வாலாஜா பேட்டை பெண்கள் கல்லூரி அடிக்கல் காட்டுவிழா ; இரவு: சென்னை.

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

பிப். 11 : காலை 11-30 மணி: மதுரை எம். டி. டி. தொழிலாளர் சங்க ஆண்டு விழா ; பகல் 12-30 மணி: திருப்பத்தூர் தண்ணீர் திட்டம் பற்றி மதுரை டி.வி.ஞனஞ் குபோண்டிய எஞ்சினியருடன் விவா தம்.

திருமணம்

புதுவை கழகத் தோழர் சார. நாராயணனுக்கும்—தோழியார் ருக்குமணிக்கும் 11—2—68 காலை 7-மணிக்கு புதுவை காந்தி வீதி, 188 எண்ணுள்ள இல்லத்தில் கவிஞர் ச. வெற்பிரகாசம் தலைமை யில் திருமணம் நடைபெறும்; அமைப்புச் செயலாளர் **என். வி. நடராசன்** எம்.எல்.சி, அமைச்சர் எ. தே. சாதிக் பாட்சா, கவிஞர் கா. வேழவேந்தன், வழக்கறிஞர் சு. பெருமாள், தோழர்கள் **எம். ஏ சண்முகம்,** செ முத்து, கே. ஏ. ஜலீல், புலவர் அமிஞ்சி தென்னன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

கண்ணதாசன் மீது வழக்கு

மதுரை எஸ். முத்து தொடுத்துள்ளார்

மதுரை, பிப். 9—

மதுரை மாவட்ட தி.மு.க. செய லாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள், கண்ணதாசன்மீது வழக்குத் தொடுத்துள்ளார்.

கடந்த ஆகஸ்டு மாதம் 17-ம் நான் 'ஜெயபேரிகை' என்னும் கார்கிரச ஏட்டில், 'கருணுநிதிக் குக் கண்ணதாசன் சவால்' என்ற தலைப்பில், 'எம் கே. மோட் டார் கம்பெனியாருக்கு 'ரூட்' கொடுத்தொகப் பேரம் பேசி கருணுநிதியும் முத்துவும் பல இலட் சக்கணக்கான ரூபாய்கள் வாங் கியது உண்டா இல்லையா ?' என்று கண்ணதாசன் பகிரங தாகச் செய்தி வெளியாகியுள் ளது.

"இந்தச் செய்தி, என்னை அவ மதிப்பதாக இருக்கிறது" என்று கூறி, கண்ணதாசன், ஆசிரியர் ஜெயகாந்தன், அச்சிடுபவரும் வெளியிடுபவருமான இராசரத்தி னம், பத்திரிகை விற்பகையாளர் சுக்கர் ஆகிய நான்குபேர்மீதும் மதுரை மாவட்ட மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அவர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

வழக்கை மாஜிஸ்திரேட் விசார ணைக்கு எடுத்துக்கொண்டு, 22-ம் நாளன்று ஒத்திவைத்துள்ளார்.

சாமி எம்.எல்.ஏ., இரா. முரு கேசன், மு. முத்துரத்தினம், எம்.பி. கிட்டப்பன், மு.க. பழ னிச்சாமி பி.ஏ.,பி.எல்., நா. கந்த சாமி பி.ஏ.,பி.எல்., சி. முத்துக் குமாரசாமி, சோ.கு. பழனிச் சாமி.

பம்பாய்—விக்ரோலி

தி.மு.க. சார்பில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம்; மாலை 6 மணிக்கு இராம பஜன சால திட லில்; தலைவர்: வினர். சுப்பைனா: பேசுவோர்: புலவர் அறிவுை நம்பி, தொ.து. அன்புச்செழியன், த.மு. பொற்கோ, எம். தாஸ், எஸ். தியாகராசன், எஸ்.எஸ். ஜான்.

நேயிலே முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆயிரக்கணக்கில், வெளிநிடுவ ராகவும், அன்பழகராகவும் கொண்டு, அழகி அச்சகத்தில் (24, தேரடிவரா னன் செட்டித் தெரு, சென்னை-1) அன்று வெளியிடப்பட்டது.